முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.30.01.2026

O.S No.220/2022

வா.சா.1- செல்வகுமார்

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

எனது அப்பா பெயர் செல்ல நாடார் என்று பிராதிலும், செல்லம் நாடார் என்றும், செல்வம் என்று இறப்பு சான்றிதழில் உள்ளது என்றும் 3 விதமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் செல்ல நாடார் என்பது உண்மையான பெயர் கூப்பிடும் பெயரை இறப்பு சான்றிதழை கொடுத்து விட்டார்கள். எனது அப்பா பெயர் செல்ல நாடார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியும் .எனக்கு செந்தில் குமாரி, லதா என்ற் 2 சகோதரிகள் உள்ளார்கள். அவர்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. எனது அப்பா, அம்மாவின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

வாசாஆ 4 உயில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால சரி. அந்த ஆவணத்தை யார் தயார் செய்தது என்ற விவரம் வாசாஆ 4 ல் இல்லை. வாசாஆ 4 எங்கு கொடுத்து கம்பியூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாசாஆ 6 ஆவணத்தில் எனது அப்பா பெயர் இல்லை. எனது தாத்தா பெயரில் தான் பட்டா உள்ளது. எனது அப்பா பெயரில் வருவாய் துறை ஆவணம் எதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 2 முதல் 5 வரையிலான ஆவணங்களில் வேறு வேறு கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சொத்திற்கான கதவு எண் 6/147 ஆகும். எனது அப்பா வசித்த வீட்டின் கதவு எண் 4/6 இ ஆகும்.

வாசாஆ 2 ஆவணத்தில் கதவு எண் 32/72 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ 5 மற்றும் 11 ஆவணங்களில் வெவ்வேறு முகவரிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி 2 முகவரிகளிலும் எனது அப்பாவிற்கு சொத்துகள் உள்ளன. எனது

அப்பா இறந்த பிறகு எனது அம்மாவிற்கும், எனது சகோதரிகளுக்கும் எனது அப்பா சொத்தில் உரிமை உண்டு என்றால் சரி. எனது அம்மாவிற்கு உரிமையிருப்பதால் தான் வாசாஆ 3 ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரி.

வாசாஆ 3 ஆவணத்தை எனது அம்மா எழுதிய பின்பு வாசாஆ 4 ஆவணத்தை இந்த வழக்கிற்காக நான் தயார் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. வாசாஆ 4 ன் படி எனக்கு எந்தவித உரிமையயும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதி பதிவு சட்டத்திற்கு உட்பட்டு வாசாஆ 3 ஆவணத்தை பதிவு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் மீதான என்னுடைய உரிமைக்கு விளம்புகை பரிகாரம் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழில் வாசாஆ 3 ஆவணத்தை நீக்கி என்னுடைய ஆவணத்தை சேர்க்க செயல் உறுத்து கட்டளை பரிகாரம் நான் கோரவில்லை என்றால் சரி. விளம்புகை பரிகாரமும் செயல் உறுத்து கட்டளை பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் 2 முதல் 3 பிரதிகளுக்கு எதிராக நான் பரிகாரம் எதும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பிராதில் 2,3 பிரதிகளுக்கு பரிகாரம் கேட்டகாமல் எனது நிருபண வாக்குமூலத்திலும் கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கானது 2,3 பிரதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.